வாசிக்க: ரோமர் 6:1-13

***"இனி வாழ்பவன் நானல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா 2:20).***

கிறிஸ்துவோடு ஒன்றித்திருத்தல் (Identification) என்ற சத்தியத்தை மிக நேர்த்தியாக விளக்குவது ரோமர் ஆறாம் அத்தியாயம். ஆழ்ந்த சத்தியம் அடங்கிய இந்த அத்தியாயத்தை எவரும் முழுவதும் விவரித்துத் தீராது; ஆனால் நடை முறைக்குத் தேவையான அளவு அதை விளக்கலாம்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு இயேசு சிலுவையில் உயிர்விட்டபோது நாமும் அவரோடு சிலுவையிலறையப்பட்டோம். இந்த விசுவாசமே கிறிஸ்துவோடு அடை யாளப்படுத்திக்கொள்ளுதலின் முதற்படி. "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ் நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோ 6:3). கிறிஸ்துவுடன் மரித்தது மட்டு மல்ல, அவருடன் புதைக்கவும் பட்டோம். "அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்" (வச 4). பாவத்துக்குச் செத்து அவருடன் புதைக்கப்பட்டுவிட்டோம்.

கிறிஸ்து உயிரோடெழுந்தபோது நாமும் உயிரோடு எழுப்பப்பட்டோம். "அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (வச 5). வெற்றி வாழ்க்கை இயேசுவின் உயிர்த்தெழுதலினாலேயே. சிலுவை நல்லது, இன்றியமையாதது, அங்கே கிறிஸ்து நமக்காய்ப் பலியானார். ஆனால் வெறும் இறப்பில் அற்புதம் ஏதுமில்லை. கிறிஸ்துவுக்கு முன்னரும் பின்னரும்கூட பல குற்றவாளிகள் சிலுவை யில் உயிர்விட்டனர். ஆனால் உயிர்த்தெழுதலே அற்புதம்; அதுவே மகிமை, மாட்சிமை, மகத்துவம்! கெத்செமனே வேண்டும், ஆனால் போதாது; கல்வாரி வேண்டும், ஆனால் போதாது; காலிக் கல்லறைக்கு வந்து சேரவேண்டும்! அதுதான் "இனி நான் அல்ல; கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார்" என்பது.

அடுத்தது? உன்னதங்களிலே அவரோடுகூட அமர்ந்திருக்கிறோம்! "கிறிஸ்து வுக்குள் உன்னதங்களிலே நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே 1:3). தந்தையுடன் ஏறிச்சென்ற கிறிஸ்து என்ன செய்தார்? மலரென கசக்கிச் சாறு எடுக்கப்பட்ட— கிழித்துப் பிய்க்கப்பட்ட— உடைத்து நொறுக்கப்பட்ட— தமது உடலை நித்திய பலியாக தந்தைமுன் சமர்ப்பித்தார். தந்தை அதை ஏற்றுக்கொண்டார். அப்படியே நாமும் நமது உடலுறுப்புகளைக் கடவுளுக்கு அர்ப்பணிக்கவேண்டும். "உங்கள் உறுப்புகளைக் கடவுளுக்கு ஏற்புடையவற்றைச் செய்யும் கருவிகளாய் அவரிடம் ஒப்படையுங்கள்" (ரோ 6:13). மட்டுமல்ல, நாம் அவருக்குள் பரிபூரணமானவர்கள் என்பதையும் விசுவாசிக்கவேண்டும். "இறைத்தன்மையின் முழுநிறைவும் உடலு ருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கிறது. அவருக்குள் நீங்களும் நிறை வுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ 2:9,10).

*என்னை ஜீவ பலியாய் ஒப்புவித்தேன், ஏற்றுக்கொள்ளும், யேசுவே!*
*நீதியி னாயுதமாய் அவயவம் நேர்ந்து விட்டேன் உமக்கு;*
*ஜோதி பரிசுத்த ராலய மாகவே சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை!*

*(கீர்த்தனை)*

*— சா. சீமோன் ஐயர், மதுரை*